## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 85 நாள் : 25.04.2024

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் 71வது வார்டு அலுவலகத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், இன்று (25.04.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, திரு. வி. க. நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட பாரதி சாலையில் ரூ.68.76 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 71வது வார்டு அலுவலகக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த வார்டு அலுவலகமானது, வார்டு-71க்குட்பட்ட பாரதி சாலையில் மூலதன நிதியின் கீழ், ரூ.68.76 இலட்சம் மதிப்பில் 1,268 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் வரவேற்பு பகுதி, மாமன்ற உறுப்பினர் அறை, துப்புரவு ஆய்வாளர் அறை, சேமிப்பு கிடங்கு அறை, உதவிப் பொறியாளர் அறை மற்றும் உதவி செயற்பொறியாளர் அறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, திரு. வி. க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. கே. ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராசன், திருமதி சாரதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**